**In the Court of the District Munsif, Eraniel**

**Original Suit No. 19/2024** **Date:23.06.2026.**

**(PW1)-** லட்சுமி நாராயணண்

**1,2** மற்றும் **4** முதல் **7** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1. கோவிலில் ஆகம விதிகளை பின்பற்ற வேண்டியது எனது கடமை தான் என்றால் சரிதான். ஆலயத்தின் உள் பிரகரத்தில் பூஜை செய்வபவர்கள் மட்டும் தான் செல்வார்கள் என்றால் சரிதான். மேற்படி நபர்கள் ஆகம விதிகள் தெரிந்தவர்கள் என்றால் சரிதான். ஆகமா விதிகள் தெரியாத நபர்கள் பிரகாரத்திற்குள் சென்றால் மக்களையும் மண்ணையும் பாதிக்கம் என்றால் சரிதான். நான் பல முறை கோவில் உள்ள பிரகாரத்திற்குள் செல்ல முயற்சிததால் பிரதிவாதிகள் என்னை தடுத்து எனது செயல் சரியல்ல என்று சொன்னதற்கு எனக்கு பிரதிவாதிகள் மீது விரோதம் எற்பட்டது என்றால் சரியல்ல.

2. எனவே தான் நான் தேவையில்லாமல் பிரதிவாதிகளை பொறுத்து குறுஞ்செய்தி அனுப்பி உள்ளேன் என்றால் சரியல்ல, நான் கோவில் பிரகாரத்திற்குள் செல்லவில்லை. நான் குறுஞ்செய்தி மூலம் பொய்யான சங்கதிகளை பரப்பி பிரதிவாதிகளின் குடும்ப நபர்களை கேலி செய்து அவர்களுக்கு நெருக்கடி கொடுத்ததால் 1 ஆம் பிரதிவாதி அவரது பதவியில் இருந்து விலகிகொண்டார் என்றால் அவர் உடல்நிலை சரியில்லாததால் அவர் விலகிக்கொணடார். 1 ஆம் பிரதிவாதியின் அம்மன் கோவிலில் இருந்து 7 கீ.மீ தொலைவில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதி பிறவியிலேயே உடல் ஊனமுற்றவர் என்றால் சரிதான்.

3. அவர் மேற்படி உடல்நிலையுடன் தினமும் கோவிலுக்கு சென்று தொண்டு செய்பவர் என்றால் சரிதான், அனால் தவறாக செய்கிறார். நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதி SBI வங்கியில் மேலாளராக பணியாற்றி ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான். எனக்கு அறக்கட்டளையுடன் பிரச்சனை இருந்தால் அதை நான் பொது குழு கூட்டுவதற்கு முறையாக அறவிப்பு கொடுத்து கூட்டியிருக்க வேண்டும் என்றால் அறக்கட்டளையில் அவ்வாறு ஒரு விதி இல்லை. அறக்கட்டளை உறுபினர்கள் உலகம் முழுவதும் உள்ளனர் என்றால் சரிதான், 1500 மேல் உறுபினர்கள் உள்ளனர்.

4. அதேபோல் அனைத்து வருடங்களில் அறக்கட்டளையின் வரவுசெலவு கணக்குகள் அனைவருக்கும் அனைத்து உறுபினர்களுக்கும் அனுப்படும் என்றால் சரிதான். நான் பிரதிவாதிகளை கஷ்டப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பொய்யான

சங்கதிகளை கூறி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எனவே எனது வழக்கு பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றாலும் சரியல்ல.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**